**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376 /2019 PW . 6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆஷா | தந்தை/கணவர் பெயர்: சதீஸ்குமார் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.04.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜரில்லை. 1,2 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**29.04.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிங்கம்புணிரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.03.2017ம் தேதி எனக்கு சொந்தமான சுமார் 20.05 கிராம் எடை கொண்ட தங்க நகையை சிங்கம்புணரியில் உள்ள மணப்புரம் கோல்டு பைனான்ஸ் கிளையில் எனது பெயரில் அடகு வைத்து ரூ.41,000 /- பணமாக பெற்றேன். மீண்டும் மேற்படி நகையை திருப்புவதற்காக மே மாதம், 2017ம் வருடம் மேற்படி கிளைக்கு சென்று கேட்ட போது மேற்படி கிளையில் உதவி மேலாளராக இருந்த மனோஜ்குமார் என்பவர் நான் அடகு வைத்த நகையை காட்ட சொன்ன போது வேறொரு நகை எனது பெயரில் உள்ளதாக சொல்லி என்னிடம் எடுத்து காண்பித்தார். அவர் காண்பித்த நகை என்னுடையது அல்ல, நான் அடகு வைத்த மேற்படி நகையல்ல.

2.அன்றையை தினமே மேற்படி கிளையில் பணிபுரியும் ராஜ்குமாரிடம் நான் அடகு வைத்த நகை மாறி இருப்பதாகவும், மேலும் நான் அடகு வைத்தது 20.5 கிராம் எடையுள்ள நகை ஆனால் மேற்படி கிளையிலிருந்து எனது பெயரில் உள்ளதாக எடுத்து காட்டிய போலி நகை சுமார் 13.07 கிராம் இருந்தது என்றும் கூறினேன். அதற்கு ராஜ்குமார் என்னிடம் தினேஷ்குமாரும், மனோஜ்குமாரும் நகையை எடுத்துக்கொண்டு போலி நகையை வைத்தாக என்னிடம் கூறினார்.

3. மேற்படி தினேஷ்குமாரும், மனோஜ்குமாரும் மணப்புரம் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள். மனோஜ்குமார் மேற்படி நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்தார். அதன் பின்னர் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். சுமார் 2 –3 மாதங்களுக்கு மேற்படி நிறுவனத்திலிருந்து எங்களை அழைத்து நான் அடகு வைத்த நகையை திருப்புவதற்கு பணம் செலுத்துமாறு கூறினார்கள். ஆனால் நாங்கள் அடகு வைத்த நகையை எங்களிடம் காட்ட மறுத்துவிட்டார்கள். என்னுடன் மேற்படி நிறுவனத்தில் அடகு வைத்த சுமார் 4–5 நபர்கள் நகைகளையும் எடுத்துச் சென்றதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4.போலீஸ் விசாரணையில் என்னவகையான நகை என்று சொல்லியுள்ளேனா என்றால் செயின் அடகு வைத்தாக சொல்லியுள்ளேன்._சம்பவம் நடந்த பிறகு 1 வாரம் கழித்து போலீசார் எனது வீட்டில், மணப்புரம் நிறுவனம், காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். ராஜ்குமார் சொல்லி தான் வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நேரடியாக தெரியாது. மணப்புரம் நிறுவனம் மீது நான் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகார் மீது என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தெரியாது. நான் அடகு வைத்ததற்கான இரசீதுகள் வங்கியில் கொடுத்தேன். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், வங்கி அதிகாரிகள் கேட்டு கொண்டதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகையை இன்றுவரை நான் பெறவில்லை.

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

5. சம்பவம் நடந்த பிறகு 1 வாரம் கழித்து போலீசார் எனது வீட்டில், மணப்புரம் நிறுவனம், காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். ராஜ்குமார் சொல்லி தான் வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நேரடியாக தெரியாது. மணப்புரம் நிறுவனம் மீது நான் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகார் மீது என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தெரியாது. நான் அடகு வைத்ததற்கான இரசீதுகள் வங்கியில் கொடுத்தேன். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், வங்கி அதிகாரிகள் கேட்டு கொண்டதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகையை இன்றுவரை நான் பெறவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.